**<u>மேய்ப்புபணி மடல</u>**

17.10.2021
16வது பொது ஆலோசனை
மன்றத்தின் துவக்கம்
மறைமாவட்ட பொது ஆலோசனை
காலம்

மலேசியா–சிங்கப்பூர்–புருணை கத்தோலிக்க மன்ற ஆயர்களாகிய நாங்கள், ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் ஆலோசனை செய்யும் திருச்சபை: ஒற்றுமை–பங்கேற்பு–பணி எனும் தலைப்பில் 14–ஆம் ஆயர்களின் பொது ஆலோசனை மன்றத்தை அக்டோபர் 2023இல் தொடங்குவதில் இறைவனுக்கு நன்றி கூறுகிறோம்.

ஆயத்த நிலை ஆவனத்தில் கூறியிருப்பது போல், இந்த ஆலோசனை கூட்டமும் அதன்பின் நடைபெறும் கலந்துரையாடலும் ஓர் ஆவனத்தை உருவாக்கும் முயற்சியல்ல; “மாறாக இலட்சியங்களை விதைப்பதிலும், முன்னறிவித்தல் மற்றும் தொலைநோக்கு பார்வையை வரைவதிலும், எதிர்நோக்குதலை பலப்படுத்துவதிலும், நம்பிக்கையை தூண்டுவதிலும், காயங்களை ஆற்றுவதிலும், உறவை உருவாக்குவதிலும் (நெய்வதிலும்), நம்பிக்கையின் விடியலை தூண்டுவதிலும், ஒருவர் மற்றொருவரிடமிருந்து கற்று கொள்வதிலும், ஒளிமிக்க மனதின் பொலிவான வளத்தை உருவாக்குவதிலும், அன்பான இதமான இதயம் மற்றும் நம் கரங்களுக்கு வலு கொடுக்கவும்" (ஆயத்த நிலை ஆவனம்)

இந்த தொலைநோக்கு பார்வை கொண்ட ஆலோசனை மன்ற திருச்சபையில், நாம் எல்லோரும் இறைமக்களைக் கொண்ட திருச்சபையாக "வாழ்க்கை, இறை நம்பிக்கை,பண்பாடு மற்றும் ஆவியில் ஊக்கம் குறைந்த மக்கள்" போன்றவர்களோடு தொடர்ந்து உரையாடல் நடத்தி முன்னேறுவோம்.

மேலும் திருதூதர்களின் திருச்சபையாக, திருத்தந்தை பிரான்சிஸூடன் திருச்சபையை கட்டியெழுப்பும் வாரிசுகளாக ஒற்றுமையோடு நாங்கள் முன் நோக்கி செல்கின்றோம். ஒன்றாக இணைந்து இவர்கள், வேற்றுமையில் ஒற்றுமை மற்றும் தொடர்ச்சியான

THE CATHOLIC BISHOPS' CONFERENCE OF MALAYSIA, SINGAPORE & BRUNEI (CBCMSB)
APC, 5th Floor, No. 5, Jalan Robertson, off Jalan Pudu, 50150 Kuala Lumpur, Malaysia
Tel: +603-2078 5777 Email: exesec@cbcmsb.org Website: cbcmsb.org

நிலையில் அன்பு மற்றும் உண்மை என்னும் நிலையை முதன்மையாக கையாளுகிறார்கள்.

ஒரு ஆலோசனை மன்றத்தின் தூரநோக்கு பார்வை மற்றும் அழைப்பு என்பது:
அ) தனிப்பட்ட மாற்றத்திற்கான பயணம் மற்றும்
ஆ) திருச்சபையின் மூலம் பரிசுத்த ஆவியின் வழிநடத்தலுக்கு கீழ்ப்படிதல்

இதனை அடைவதற்கு நாம் இன்று உலகெங்கும் தொடங்கும் இந்த செயல்முறையில் உண்மையோடும் விசுவாசத்தோடும் பங்கெடுப்பதன் மூலம் 2023-இல் தொடங்கும் ஆயர் பொது ஆலோசனை மன்றத்தை நோக்கி செல்ல முடியும்.

புனித யோசேப்பு–அனைத்துலக திருச்சபையின் பாதுகாவலர், அன்னை மரியாள்–நமது திருச்சபையின் அன்னை, நமது உள்ளூர் மலேசியா–சிங்கப்பூர்–புருணை ஆலயங்களுக்காக பரிந்து பேசுவார்களாக.

மாநாட்டின் இணையதளத்தில் நீங்கள் அசல் ஆவணத்தைப் படிக்கலாம்

https://cbcmsb.org/synod-of-bishops-2023/

Sebastian Francis

**Rt. Rev. Sebastian Francis, D.D.**
தலைவர்
கத்தோலிக்க ஆயர்கள் மாநாடு
மலேசியா–சிங்கப்பூர்–புருணை (CBCMSB)

Synod 2021 2023
For a synodal Church
communion | participation | mission